டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 9.9.2023 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 71 - Madurai | Online Edition

# சேமிப்பு கிடங்குகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை, செப்.8

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் 3 கிடங்கு களை திறந்து வைத்து, கட்டப்பட உள்ள 2 கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார் முதல்வர் ஸ்டாலின்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 7 கோடியே 20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 3 கிடங்குகளை திறந்து வைத்து, திருப்பூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 6 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 கிடங்கு களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக் காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப் படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் முறையே 50 விழுக்காடு பங்கு கொண்ட இரு பங்குதாரர்கள் ஆவர். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 60 இடங்களில் 269 கிடங்குகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனக் கிடங்குகளில், விவசாயிகள், வியாபாரிகளின் விவசாய விளை பொருட்கள், விதைகள், உரங்கள் சேமித்து வைக்கப்பட்டு அதற்கான ரசீது (Warehouse Receipt) வழங்கப்படுகிறது. மேலும், அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும்

பிற நிறுவனங்களால் சேமிக்கப்படும் பொருட்களையும் இருப்பில் வைத்து செயல்பட்டு வருகிறது.

2021-22ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி நிறுவப்படும் என்றும், 2022-2023ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் இராணிப்பேட்டை மற்றும் திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் காலியாகவுள்ள இடத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், திருவப்பூரில் ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு மற்றும் மதுரை மாவட்டம், திரு மங்கலம் வட்டம், கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு, என மொத்தம் ரூபாய் 7 கோடியே 20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகளை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும், திருப்பூர் மாவட்டம் பல்லடம், திருப்பத்தூர் மாவட்டம் குனிச்சி ஆகிய இடங்களில் மொத்தம் ரூபாய் 6 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் தலா 3400 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் கட்டப்படவுள்ள இரண்டு சேமிப்பு கிடங்குகள் கட்டும் பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணி புரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப் படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாள மாக, முதலமைச்சர் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# 2024ம் ஆண்டுக்குள் சமூகப்பாதுகாப்பு திட்டங்கள் அனைத்திற்கும் ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும்

புது தில்லி, செப்.8

பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்புக்கு இணங்க 2024ம் ஆண்டுக்குள் சமூகப்பாதுகாப்பு திட்டங்கள் அனைத்திற்கும் ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும் என்று இந்திய உணவுக் கழகத்தின் சென்னைக் கோட்ட மேலாளர் தேவேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஆசியாவிலேயே 2-வது பெரிய கிடங்கு அமைந்துள்ள ஆவடியில் இந்திய உணவுக்கழக அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி ஆந்திரா, சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படுவதாகக் கூறினார்.

பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் கோதுமை ஆவடிக் கிடங்கில் இருப்பு வைக்கப் பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இக்கிடங்கில் இருந்து சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களின் ரேன் கடைகளுக்கான அரிசி அனுப்பப்படுவதாக குறிப்பிட்ட அவர், ஒன்றரை கோடி பயனாளிகளுக்கு ரேசன் அரிசி வழங்கப் படுவதாக கூறினார்.

83 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆவடிக் கிடங்கில் 1,71,000 மெட்ரிக் டன் அரிசி இருப்பு வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். தமிழ்நாட்டில் தஞ்சாவூர், வேலூர், கடலூர், கோயம் புத்தூர், தூத்துக்குடி, சென்னை ஆகிய ஆறு இடங்களில் கிடங்குகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக அமிர்தகால மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்திய உணவுக்கழகத்திற்கு உணவு தானியங்கள் கொண்டு வரப்படுவது மற்றும் இங்கிருந்து வெளியே அனுப்பப் படுவது பற்றி செய்தியாளர்களுக்கு நேரடி விளக்கம் அளிக்கப் பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேலூர் மாவட்டத்திற்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் வேளாண் ஆலோசனைகள்

வேலூர், செப்.8

செப்டம்பர் 12, 13 தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 முதல் 25 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 70 விழுக்காடாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 14 முதல் 18 கி.மீ வரை மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொதுவான ஆலோசனைகள்

● வரும் நாட்களில் காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோ மீட்டருக்கும் அதிகமாக வீசக்கூடும் என்பதால் வாழை, முருங்கை போன்ற லேசான மரங்கள் சாயாமல் இருக்க முட்டு கொடுக்க வேண்டும்.

● தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி/ நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

● பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.மேலும் தாழ்வான பகுதிகளில் வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.

## வேளாண் ஆலோசனைகள்

● நெல் பூட்டை பருவத்தில் பருவத்தில் TNAU நெல் ரீப் 3 கிலோ முறையே 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தேவையான ஒட்டும் திரவம் சேர்த்து 10 நாட்கள் இடைவெளியில் ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். இதனால் நெற்கதிரில் ஏற்படும் மலட்டுத் தன்மை குறையும், மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், வறட்சி மற்றும் உயர் வெப்பத்தை தாங்கும் திறன் அதிகரிக்கும்.

● நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நெற்று நிரப்பவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் விதைத்த 35ம் நாள் (50% பூக்கும் சமயத்தில்) மற்றும் 45ம் நாள் (காய் முற்றும் பருவம்) இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ (ஒவ்வொரு தெளிப்பிற்கும்) வீதம் தெளிக்க வேண்டும்.

● தென்னையில் சிவப்பு கூன் வண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைத் தூளையும், மணலையும் 1:2 என்ற விகிதத்தில் கலந்து, மரம் ஒன்றிற்கு 150 கிராம் வீதம் நடுக்குருத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்க வேண்டும்.

● காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

● கறவை பசுக்களில் அஜீரணம் கோளாறு ஏற்பட்டால் ஹிமாலயன் பட்டிசா என்ற மூலிகை மருந்து பொடியை சிறிது நீரில் கலந்து 50 கிராம் அளவுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் இரண்டு நாட்களுக்கு வாய் வழியே கொடுத்தால் அஜீரணம் சரியாகி நன்கு தீவனம் எடுத்து கொள்ளும்.

● ஆடுகள் அரிசி, சோறு, மாவு, கஞ்சி தானியங்கள் போன்ற வற்றை அதிகம் உண்டால் வயிற்று உப்புசம் ஏற்படும். அப்போது ப்ளோட்டோசில் என்ற மருந்தை காலையில் 10 மி.லி மாலையில் 10 மி.லி வீதம் வாய் வழியே கொடுத்தால் வயிற்று உப்புசம் சரியாகும்.

● கோழிப் பண்ணைகளில் கோழி குஞ்சுகள் வாங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்பு புகைமூட்டம் செய்ய வேண்டும். தூய்மை செய்த கோழிப்பண்ணையினுள் கூளபொருட்கள் தண்ணீர், தீவன டப்பாக்கள் வைத்த பின்னர் சுற்றுப்புற படுதாவை உயர்த்தி கட்ட வேண்டும். உட்புற தரைப்பகுதிக்கு 100 சதுர அடி இடத்திற்கு ஒன்று வீதம் உலோக சட்டி அல்லது மண் தட்டுகளை வைத்து அதில் 200 மி.லி பார்மலின் எடுத்துக்கொண்டு ஒவ்வொன் றிலும் 100 கிராம் ப்ளீச்சிங் பவுடரை கொட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் புகைமூட்டம் ஏற்படும். இதை மூன்று நாட்களுக்குப் பின்பு எடுத்துவிட்டு ஐந்தாம் நாளில் கோழிக்குஞ்சுகளை விடலாம். இதன் மூலம் நச்சுயிரிகள் அளிக்கப்பட்டு நோய் ஏற்படும் வாய்ப்புகள் தடுக்கப்படுகிறது.

தகவல் : **திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் அ.திருமுருகன், வேளாண் காலநிலை தொழில்நுட்ப வல்லுநர், கு.ராதிகா மற்றும் வானிலை கண்காணிப்பாளர், சா.டேவிட்.**

மேலும் விவரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், **மாவட்ட வேளாண் வானிலை மையம், வேளாண் அறிவியல் நிலையம், விரிஞ்சிபுரம்,** வேலூர் மாவட்டம் – 632104, தொலைபேசி எண் : 0416 2900142.

# இயற்கை வேளாண்மையில் நெல் சாகுபடிக்கேற்ற பயிர் பாதுகாப்பு முறைகள்

திருவாரூர், செப்.8

நமது நாட்டில் மட்டும் அல்லாது உலக அளவில் 50 சதவீதத் திற்கும் மேலான மருந்துகள் உட்கொள்ளக்கூடிய உணவுப் பொருளாக நெல் விளங்குவதால், பூச்சிக்கொல்லி மருந்து இல் லாத, தரமான சத்துமிகுந்த நெல்லினை உற்பத்தி செய்வதற்கு இயற்கை வேளாண்மையில் உற்பத்தி செய்யப்படும் நெல்லின் தரம் கவர்தல், சந்தையில் கூடுதல் விலை கிடைத்தல், உற்பத்தி செலவு குறைதல் மற்றும் மண்ணின் வளம் பெருகுதல் போன்ற காரணங்களால் சமீப காலங்களில் இயற்கை முறையில் நெல் சாகுபடி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகத் கருதப்படுகிறது.

**நெல் சாகுபடிக்கேற்ற இயற்கை வேளாண் பயிர் பாதுகாப்பு முறைகள்**

இயற்கை நெல் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ஒரு சவாலாக விளங்குகிறது. அப்படி இருந்த போதிலும் இரசாயன பூச்சிக்கொல்லி அல்லாத ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை ஆரம்பத்திலிருந்து ஒழுங்காக கடைப் பிடிப்பதால் பூச்சி மற்றும் நோய்களை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

- கோடை உழவு செய்வதால் மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

- வரப்பில் உள்ள களைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

இனக்கவர்ச்சி பொறி மற்றும் விளக்குப்பொறி வைத்து பூச்சி களின் நடமாட்டம் மற்றும் எண்ணிக்கையை கண்காணித்து தகுந்த கட்டுப்பாடு முறைகளை கையாளுதல் வேண்டும். இயற்கை முறையில் கிடைக்கக்கூடிய தாவர வகை பூச்சி மருந்துகள் மற்றும் உயிரியல் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு காரணிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். பசுவிலிருந்து கிடைக்கக்கூடிய ஐந்து பொருட்களான சாணம், சிறுநீர், பால், தயிர் மற்றும் நெய் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பஞ்சகவ்யா கரைசலை (3 சதம்) இலைவழி ஊட்டமாக தெளிக்க வேண்டும்.

**தத்துப்புழு / இலைச்சுருட்டுப்புழு**

- 5 சதம் வேப்பம் கொட்டைச்சாறு தெளித்தல்.
- ட்ரைக்கோடெர்மா ஜப்பானிக்கம் என்ற ஒட்டுண்ணி அட்டையை ஏக்கருக்கு 2 சி.சி. அளவில் ஒரு வார இடைவெளியில் மூன்று முறை கட்டுதல்.
- பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் உயிரியல் காரணி ஏக்கருக்கு 400 கிராம் வீதம் தெளித்தல்.

**தத்துப்பூச்சி மற்றும் உறிஞ்சிம் பூச்சி**

- சரியான அளவு தழைச்சத்தை இடுதல்.
- காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர்ப்பாசனம் செய்தல்.




- வேப்பம் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 2 சதம் தெளித்தல்.

**வாடல் நோய்**

- வரப்பில் உள்ள களைகளை அகற்றுதல்.
- அதிக அளவு தழைச்சத்து இடாமல் இருத்தல்.
- எதிர் சக்தி கொண்ட இரகமான கோ-47 சாகுபடி செய்தல்.
- சூடோமோனாஸ் உயிரியல் காரணி 0.2 சதம் கரைசலை இடைவெளியில் மூன்று முறை தெளித்தல்.

**இலையுறை அழுகல் / இலையுறை கருகல் / பாக்டீரியா இலை கருகல்**

- சூடோமோனாஸ் உயிரியல் காரணி 0.2 சதம் கரைசலை

நடவு செய்த 45 ஆம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளித்தல்.

● வேப்பம் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப் பெண்ணெய் 2 சதம் தெளித்தல்.

● வேப்பம்புண்ணாக்கு ஏக்கருக்கு 50 கிலோ இடுதல்.

● பசுவின் சாணம் 20 சதம் கரைசலை நோய் தென்படும் தருணத்தில் 15 நாள் இடைவெளியில் இரண்டு முறை தெளித்தல்.

இயற்கை வேளாண்மையில் நெல் சாகுபடி செய்யும்போது ஆரம்ப கால சமயங்களில் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. ஆனால் தொடர்ந்து இயற்கை முறையில் சாகுபடி செய்வதால் மண்வளம் பாதுகாக்கப்பட்டு, மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும் உற்பத்தி செலவு குறைந்து நிகர லாபம் அதிகரிக்கவும், சுற்றுப்புறச் சூழல் மாசுபடாதவாறு பாதுகாக்கவும் வாய்ப்புள்ளது.

மேற்கண்ட தகவலை **திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், இரா.குப்புசாமி, திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர், கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி** ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

# பெருந்துறையில் கொப்பரை ரூ.1.97 கோடிக்கு ஏலம்

ஈரோடு, செப்.8

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வேளாண்மை பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரை ஏலம் நடை பெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 5,212 மூட்டைகளில் 2 லட்சத்து 53 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். அதில் முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.75.69க்கும், அதிக பட்சமாக ரூ.83.29க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக, ரூ.41க்கும், அதிகபட்சமாக ரூ.78க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.1.97 கோடிக்கு கொப்பரை வர்த்தகம் நடைபெற்றது.

# மேலப்பிடாவூர் கிராமத்தில் கிராம அளவிலான அடிப்படை பயிற்சி

சிவகங்கை, செப்.8

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரத்தில் உள்ள மேலப்பிடாவூர், கிராமத்தில் கிராம அளவிலான அடிப்படை பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் மானாமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.ரவிசங்கர் தலைமை தாங்கி வேளாண் திட்டங்கள் மற்றும் இயற்கை விவசாயம் பற்றி விவசாயிகளிடம் எடுத்து கூறினார். சிவகங்கை உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை அலுவலர் வீரையா அட்மா திட்டங்கள், செயல்விளக்கங்கள், வெளிமாவட்ட கண்டுணர்வு சுற்றுலா, விதையின் முக்கியத்துவம், உர மேலாண்மை போன்றவை பற்றி எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் சப்பாணி முத்து, விதைநேர்த்தி செய்யும் முறைகள், விதைநேர்த்தி செய்வதால் என்ன நன்மைகள் என எடுத்துக் கூறினார். இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அ.சதீஸ், வினோத்குமார் செய்து இருந்தனர். இந்த பயிற்சியில் 20 விவசாயிகள் கலந்து கொண்டனர்.




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள், ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோவை, செப்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 12.9.23 மற்றும் 13.9.23 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- மசாலா பொடிகள்
- தயார்நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்




- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது, பேருந்து நிறுத்தம் - வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை, கோயம் புத்தூர் - 641003 என்ற இடத்தில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, 97911 77578, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# மானாவாரியில் மக்காசோள சாகுபடி தொழில் நுட்பங்கள் தெரியுமா?

பொதுவாக மானாவாரியில் 50 ஆண்டுகளுக்கு முன் நாட்டு சோளம், கம்பு, தினை, வரகு, ராகி உள்ளிட்ட நவ தானியங்கள் பெரும்பாலாக சாகுபடி செய்யப்பட்ட அன்றைய தினத்தில் உணவு பொருளாக பயன்பாட்டில் இருந்தது. அதற்கு பின் பசுமை புரட்சியின் விளைவாக நெல் உற்பத்தி அதிகரிக்க தொடங்கியது. போதிய விலையின்மையாலும், மக்களிடம் ஆர்வமின்மையால் சிறு தானியங்கள் மறந்து போனது. கடந்த சில ஆண்டுகளாக அந்த இடத்தை மக்காசோளம் பிடித்து கொண்டது. நமது நாட்டில் நெல் மற்றும் கோதுமைக்கு அடுத்தப்படியாக மக்கா சோளம் உள்ளது.

உலகம் முழுவதுமுள்ள நாடுகளில் பயிரிடப்படும் ஒரே உணவு தானியம் மக்காசோளம் தான். இதை ஆங்கிலத்தில் (ZEYA MAIZE) என்பர். இது சுமார் 10,000 ஆண்டிற்கு பின் பிரேசில் நாட்டின் பூர்வகுடிகளின் உணவுக்காக பயிரிடப்பட்டு மற்ற நாடுகளுக்கு பரவியது.

**மக்காசோள சாகுபடி தொழில்நுட்பங்கள்?**

பொதுவாக கரிசல் மண்ணில் மானாவாரியாக அதிகமாக பயிரிடப்படுகிறது. மக்காசோளத்தின் தேவை நாளுக்கு அதிகரிக்க விவசாயிகள் சாகுபடியில் அதிக அளவாக மேற்கொள்கின்றனர்.

**இரகங்கள்**

பொதுவாக இரகங்களை பயன்படுத்திட ஆர்வம் விவசாயி களிடத்தில் இல்லாத காரணத்தால் வீரிய ஒட்டு இரகங்களை (HYBRIDS) வாங்கி பயிர் செய்கின்றனர்.

**இரகங்கள்**

கோ.21, கோ1

**வீரிய ஒட்டு இரகங்கள்**

பயனிர் 3502, மான்சான்டா DKC, SYNGENTA NK 6240, NK 30 BIO 9637, ராசி 3414 மற்றும் மகாராஜா போன்ற விதைகள் உள்ளன.

### விதை அளவு எக்கருக்கு 8 கிலோ

படைபுழுவை கட்டுபடுத்திட ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பேவேரியா பேசியானா' கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

### இடைவெளி

45 X 20 செ.மீ ஏக்கருக்கு 4000-5000 செடிகள் இருக்க வேண்டும்.

### நிலம் தயாரிப்பு

ஒரு எக்கருக்கு 5 டன் தொழு உரத்துடன் 5 கிலோ நுண்ணூட்ட சத்து இடவேண்டும். மண் பரிசோதனைபடி




உரமிட வேண்டும். இல்லாத பட்சத்தில் பொது பரிந்துரையான 15:25:20 என்றளவில் தழை, மணி, சாம்பல் சத்துகளை இட வேண்டும். விதைக்க/ஊன்றிய 5-6ஆம் நாளில் முளைக்க தொடங்கும்.

### களை நிர்வாகம்

பொதுவாக எந்த ஒரு பயிரிலும் களை எடுக்காத பட்சத்தில் அது கால்பயிரே. எனவே இரண்டு களை பயிர் வளர்ந்த 45 நாட்களுக்குள் எடுக்க வேண்டும். களைக்கொல்லி பயன்படுத்த நினைத்தால் அட்ரசின் 50% WP 200 கிராம் / ஏக்கர் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஊடுபயிர் பயறு வகை சாகுபடி செய்யப்பட்டால், இந்த களைக் கொல் லியை பயன்படுத்த முடியாது. மாறாக 'பெண்டி மெத்திலின் 800 மி.லி 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும்.

களைக்கொல்லி தெளிக்கும் போது நிலத்தில் போதுமான ஈரம் இருக்க வேண்டும்.

எனவே மக்காசோள சாகுபடி சில இடங்களில் தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி விதைக்கபட்டு வருகிறது. தரமான விதையும் தகுந்த இடைவெளியும் சரியான அளவில் உரமிட்டால் நாம் எதிர்பார்த்த அளவு மக்காசோளம் மகசூல் பெறலாம். இருந்தாலும் கூட படைப்புழு தாக்கம் காட்டுபன்றி களின் தாக்கத்தை நாம் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப் படுத்திட வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நல்ல விலை, சாகுபடியில் அதிக வேலை ஆட்கள் தேவை யில்லாத மக்காசோள சாகுபடியை தொடங்குவோம், நிச்சய மாக நிறையான மகசூல் பெறுவோம். மானாவாரியில் சாதனை படைப்போம். கரிசல் மண்ணில் புரட்சி படைக்க மக்காசோளம் பயிரிடுவோம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# பசுந்தாள் உர பயிர் விதைகளை விதைப்பரிசோதனை செய்து பயன் பெற விதைப்பரிசோதனை அலுவலர் வேண்டுகோள்

தஞ்சாவூர், செப்.8

டெல்டா மாவடங்களில், நெல் பயிரிடுவதற்கு முன் பசுந்தாள் உரப்பயிர்களை விதைத்து 40-50 நாட்களில் மண்ணில் மடித்து உழுது விடுவது, மண்ணில் தழைச்சத்தை அதிகரிக்கச் செய் கிறது. பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பை, தக்கைப்பூண்டு, கொளிஞ்சி, சித்தகத்தி, மணிலா அகத்தி மற்றும் நரிப்பயிறு போன்றவற்றை பயிரிட்டு 40-50 நாட்களில் மடித்து உழுது விடும்போது 10-25 டன் பசுந்தாள் உரமானது ஒரு ஹெக்டருக்கு கிடைக்கின்றது.

| வ. எண். | பயிர் | குறைந்த பட்ச முளைப்புத் திறன் (%) | குறைந்த பட்ச புறத் தூய்மை(%) | அதிக பட்ச ஈரப் பதம் (%) | பணி விதை மாதிரி அளவு(%) |
|---|---|---|---|---|---|
| 1. | சணப்பை | 80 | 98 | 9 | 50 |
| 2. | கொளிஞ்சி | 70 | 98 | 9 | 25 |
| 3. | தக்கைப்பூண்டு | 75 | 98 | 9 | 25 |
| 4. | நரிப்பயிறு | 75 | 98 | 9 | 100 |

தரமான விதைகளைப் பயன்படுத்தும்போது குறிப்பிட்ட அளவு முளைப்புத்திறனுடன் இருப்பதனால், விதை அளவு குறைவாக பயன்படுத்தப்படுவதுடன், நிறைந்த பசுந்தாள் உரமானது கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட அளவு பணிவிதை மாதிரிகளை எடுத்து முளைப்புத்திறன் பரிசோதனை செய்ய தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் தஞ்சாவூர் காட்டுத்தோட்டத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும், திருவாரூர் மாவட்ட விவசாயிகள், திருவாரூர், விஜயபுரம், பெரிய மில் தெருவில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும் நாகப் பட்டினம் மாவட்ட விவசாயிகள் நாகப்பட்டினம், வெளிப் பாளையம், 15 காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும் தங்கள் முழு முகவரி உடன், விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) பகுப்பாய்வு கட்டணமாக செலுத்தி, முளைப்புத்திறன் பரி சோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம் என **தஞ்சாவூர் விதைப்பரிசோதனை அலுவலர் இரா.குப்புசாமி** தெரிவித்தார்.

# வேளாண் அறிவியல் மையத்தில் தேசிய அளவிலான அடிமட்ட கண்டுபிடிப்புகள் பரவலாக்கம்



தேனி, செப்.8

தேனி மாவட்டம், சென்டெக்ட், வேளாண் அறிவியல் மையம் மற்றும் அகமதாபாத்திலுள்ள தேசிய கண்டுபிடிப்புகள் நிறுவனம் –இந்தியா இனைந்து கொய்யா மற்றும் வெங்காயம் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது.

வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) பொ.மகேஸ்வரன் வரவேற்புரையாற்றினார். வேளாண் அறிவியல் மையத்தின் சேர்மன் முனைவர் பெ.பச்சைமால் தலைமையுரை யாற்றினார். குஜராத்திலுள்ள தேசிய கண்டுபிடிப்புகள் மையத்தின் விஞ்ஞானி முனைவர் பார்த்குமார் பி.தவே, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்பு கள் மற்றும் அதன் பரவலாக்கம் பற்றி எடுத்துரைத்தார். மேலும் தேசிய கண்டுபிடிப்புகள் நிறுவனத்தின் மூலம் தேசிய விருது பெற்ற ஜிவிலாஸ் கொய்யாவின் சிறப்பம்சங்கள் பற்றி விளக்கமளித்தார்.

தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) தனலெட்சுமி, கலந்து கொண்டு வேளாண் கண்டுபிடிப்புகளுக்கான அரசுத் திட்டங்கள் மற்றும் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கமளித்தார். லக்னோவைச் சேர்ந்த ஜிவிலாஸ் கொய்யாவின் உரிமையாளர் லலித் கலந்து கொண்டார். வேளாண் அறிவியல் மையத்தின் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கோ.இராஜாராமன், கொய்யா மற்றும் வெங்காய சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சியளித்தார். தேசிய கண்டுபிடிப்புகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அடிமட்ட கண்டுபிடிப்பாளரின் ஜிவிலாஸ் கொய்யா கன்றுகள் மற்றும் சோனா 40 இரக பெரிய வெங்காயம் விதைகள் வழங்கப்பட்டது. மேலும் அடிமட்ட கண்டு பிடிப்பாளர்களுடன் புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய கலந்துரை யாடல் நடைபெற்றது.

இவற்றில் தேனி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலியைச் சார்ந்த அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யா சிவசெல்வி தேசிய ஊட்டச்சத்து மாதத்தின் முக்கியத் துவம் பற்றி விளக்கமளித்தார்.

# திருத்திய நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்த வேளாண் மாணவர்கள்



திருச்சி, செப்.8

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக, வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில், இளங்கலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் த.வெங்கடேஷ், செ.நவீன் சுந்தர், த.சக்தி பாலாஜி,




மு.தானுமலைய பெருமாள் மற்றும் பொ.அழகு பாண்டியன் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் (யூபுநிசி) திருச்சி, லால்குடி வட்டாரம் எசனைக்கோரை ஊராட்சியில், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக மாணவர்கள் விவசாயி களுக்கு திருத்திய நெல் சாகுபடி குறித்துப் பயிற்சி அளித்தனர். பயிற்சியின் போது திருந்திய நெல் சாகுபடி முறையினை மாணவர்கள் விரிவாக விவரித்து, இயல்பான நெல் சாகுபடி மற்றும் திருத்திய நெல் சாகுபடியினை வேறுபடுத்திக்காட்டி, திருந்திய நெல் சாகுபடியினால் ஏற்படும் பயன்களை விவசாயி களிடம் எடுத்துக் கூறி, அடுத்த பருவத்தில் திருத்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி அதிக லாபம் பெறுமாறு கேட்டுக் கொண்டனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இராமநாதபுர மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்

இராமநாதபுரம், செப்.8

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இராமநாதபுர மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 35 முதல் 36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை யானது 25 முதல் 26 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 40 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 16 முதல் 20 கிலோ மீட்டர் வேகத்தில் தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

விவசாயிகள் பெய்யக்கூடிய மழையை பயன்படுத்தி நிலங்களை உழவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுக்கின்றனர். விவசாயிகள் கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் குறுகிய கால மற்றும் வறட்சியை தாங்கி வளரும் திரூர்குப்பம் 15, ஆடுதுறை 53, கோயம்புத்தூர் 53 மற்றும் கோயம்புத்தூர் 55 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம். விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் விதையை கடினப் படுத்தி விதைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விதை கடினப் படுத்த ஒரு கிலோ விதையை ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு சமவிகித கரைசலில் (10 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில்) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அதன் பழைய ஈரப்பத்திற்கே திரும்பும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். கடினப்படுத்தப்பட்ட விதைகளை நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் இயந்திர விதைப்பானை பயன்படுத்துவதால் சரியான ஆழத்திலும் சரியான இடைவெளியை பராமரிப்பதன் வாய்ப் பையும், வறட்சியின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை குறைப்பதற்கான வாய்ப்புள்ளது.

தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்ப

நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகி விடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம்.

தென்னையில் சிவப்பு கூண்வண்டு தாக்கப்பட்ட மரங்களில் புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே




தள்ளப்பட்ட மர நாறுகளும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 1 மில்லி உடன் 1 மில்லி தண்ணீர் கலந்து செலுத்தவும்.

மேலும் விவசாயிகள் கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று கோமாரி, சப்பை மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போடலாம் என வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ச.வள்ளல்கண்ணன், தொழில் நுட்ப வல்லுநர் ம.வெங்கடேஸ்வரி மற்றும் வானிலை கண்காணிப்பாளர் மா.ராஜேஸ்கண்ணன் அறிவுறுத்துகின்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பச்சை வரி இறால் குஞ்சுகளை கடலில் விடபட்டது



புது தில்லி, செப்.8

7.9.23 (வியாழக்கிழமை) அன்று, 6.8 மில்லியன் பச்சை வரி இறால் குஞ்சுகள், மண்டபம், கோயில்வாடி பாக் ஜலசந்தி கடற்பகுதியில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் நிதியுதவியுடன், தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடல் பகுதியில், பச்சை வரி இறால் குஞ்சுகளை, பொரிப்பகங்களில் வளர்த்து, கடலில் விடுதல் என்ற திட்டத்தின் கீழ் மண்டபம் மத்திய கடல்




மீன்வள ஆராய்ச்சி நிலைய தலைவர், டாக்டர் K.வினோத், டாக்டர் G.தமிழ்மணி, திட்டத்தின் தலைவர், மண்டபத்திலுள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் னி. சிவகுமார், உதவி இயக்குனர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மண்டபம், விசைப்படகு சங்கம் மற்றும் நாட்டுப்படகு சங்க முக்கிய நிர்வாகிகள் அவர்களால் கடலில் விடப்பட்டன. இத்தகைய முயற்சிக்கு இந்திய அரசு மற்றும் ICAR-CMFRIக்கு மீனவர்கள் நன்றி தெரிவித்தனர். மேலும், பச்சை வரி இறால் வளத்தை பாதுகாக்க, இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும் என்று தெரிவித்தனர்.

திட்டம் துவங்கியதிலிருந்து (பிப்ரவரி, 2022), இதுவரை 75.34 மில்லியன் பச்சை வரி இறால் குஞ்சுகள் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் விடப்பட்டன. நிகழ்ச்சியை, மண்டபம் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய மூத்த விஞ்ஞானி, டாக்டர் B. ஜான்சன் ஒருங்கிணைத்தார்.


HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய வல்லுநர் விதை உற்பத்தி திடலில் கண்காணிப்புக்குழு ஆய்வு



ஈரோடு, செப்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும் உயர் விளைச்சல் தரும் பயிர் இரகங்களைக் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றது. அவ்வாறு வெளியிடப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களின் கரு விதைகளைக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங் களில் விதைப்பண்ணைகள் அமைத்து வல்லுநர் விதை உற்பத்தி செய்து மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு விதை பெருக்கத்திற்காகவும் விவசாயிகளுக்கு சாகுபடிக்காகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளை ஆய்வு செய்து வயல் ஆய்வு தரத்தினை துல்லியமாக கடைபிடித்து தரமான விதைகளை உற்பத்தி செய்வதை உறுதி செய்திடும் பொருட்டு வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு இக்குழுவானது விதைப்பயிர் பூப்பருவம், அறுவடைப் பருவம் மற்றும் விதைக் குவியல் விதை சுத்தி ஆகிய நிலைகளில் ஆய்வு செய்து விதைத் தரத்தினை உறுதி செய்கின்றது.

இந்நிலையில் நடப்பு பருவத்தில் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நிலக்கடலை பயிரில் பிஎஸ்ஆர் 2 இரகம், உளுந்து பயிரில் விபிஎன் 8 மற்றும் விபிஎன் 9 ஆகிய இரகங்களில் வல்லுநர் நிலை விதைப்பண்ணைகள் அமைக்கப் பட்டு விதைப்பயிர் பூப்பருவம் மற்றும் அறுவடைப் பருவத்தில் உள்ளது.

இவ்விதைப் பண்ணைகளை பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சக்திவேல், உதவி பேராசிரியர்கள் சசிகலா, உத்தராசு, அமுதா, ஈரோடு, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் சு.மோகனசுந்தரம் மற்றும் பவானிசாகர் விதைச் சான்று அலுவலர் ஹேமாவதி ஆகியோர் அடங்கிய வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு ஆய்வு செய்தது. ஆய்வின் போது விதைப்பயிர் நடவு முறை, விதைப்பயிரில் பிற இரக கலவன்கள், பயிர் விலகு தூரம், குறித்தறிவிக்கப்பட்ட நோய்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்தனர்.

மேலும் தரமான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்திட தேவையான அனைத்து நடைமுறைகளையும் கடைபிடிக்க களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.




# நிலக்கடலை ரூ.16.57 லட்சத்துக்கு விற்பனை

ஈரோடு, செப்.8

ஈரோடு மாவட்டம், சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலைக்காய் விற்பனைக்கான ஏலம் நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 790 மூட்டைகள் கொண்ட 23,999 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காயை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில் கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.62.39க்கும், அதிகபட்ச விலையாக ரூ.84.30க்கும், சராசரி விலையாக ரூ.74.50க்கும் விற்பனையானது. நிலக்கடலைக் காய் மொத்தம் ரூ.16,57,014க்கு விற்பனையானது.

# அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் பயிற்சி



அரியலூர், செப்.8

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஆனந்தவாடி கிராமத்தில் உள்ள பயனாளிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, அறவுரையின்பேரில் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

முன்னதாக செந்துறை வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலுசாமி, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப் பட்டு வரும் திட்டங்கள் மற்றும் மானிய விலையில் உள்ள இடுபொருட்கள் பற்றியும் எடுத்து கூறினார். பின் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் விபரம் மற்றும் தரிசுநில தொகுப்புகள் பற்றி கேட்டறிந்தார். பிறகு ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களை பார்வையிட்டார். கிராம நிர்வாக அலுவலர் சுடலைமுத்துவிடம் தரிசுநில விபரங்களை கேட்டறிந்தார்.

இந்த பயிற்சியில் கிரீடு வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி அசோக் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம் பற்றியும் மக்காச்சோள சாகுபடியில் படைப்புழு மேலாண்மை குறித்த தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்து கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேசன் மற்றும் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சிவா, முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# நிலக்கடலை ரூ.5 லட்சத்துக்கு விற்பனை

நாமக்கல், செப்.8

நாமக்கல் மாவட்டம், சாலைப்புதூரில் வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடம் செயல்பட்டு வருகிறது. இங்கு வாரந்தோறும் தேங்காய், தேங்காய் பருப்பு, எள், நிலக்கடலை காய் ஆகியவற்றுக் கான ஏலம் நடைபெறுகிறது. இதில் அருகே உள்ள கரூர், பரமத்தி வேலூர் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் விளைவித்த வேளாண் பொருட்களை விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர். இங்கு நடைபெறும் ஏலத்தில் தமிழகம் மற்றும் வெளிமாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் எண்ணெய் நிறுவன முகவர்கள் கலந்து கொண்டு பொருட்களை வாங்கி செல் கின்றனர். அதன்படி இந்த வாரம் நடந்த ஏலத்தில் நிலக்கடலைகாய் 79.72 குவிண்டால் எடை கொண்ட 278 மூட்டை காய் விற்பனைக்கு வந்தது. இதில் கிலோ ஒன்றுக்கு அதிகபட்ச விலை யாக ரூ.83.30க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.65.45க்கும், சராசரி விலையாக ரூ.80.50க்கும் என ரூ.5,56,737/-க்கு விற்பனையானது.

# பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு ஏலம்

நாமக்கல், செப்.8

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் விளையும் தேங்காய்களை உடைத்து அதை உலர்த்தி விவசாயிகள் வியாழக்கிழமை தோறும் பரமத்தி வேலூர் வெங்கமேட்டில் உள்ள பரமத்தி வேலூர் மின்னணு தேசிய வேளாண்மை சந்தைக்கு கொண்டு வருகின்றனர். இங்கு தரத்திற்கு தகுந்தார் போல் மறைமுக ஏலம் விடப்படுகிறது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மின்னணு ஏலத்திற்கு 15,960 கிலோ தேங்காய் பருப்பு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.77.01க்கும், குறைந்தபட்சமாக 51.99 க்கும், சராசரியாக ரூ.76.89க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.11,17,263க்கு ஏலம் நடைபெற்றது. ஏலத்திற்கு 10,245 கிலோ தேங்காய் பருப்பு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ 78.99க்கும் குறைந்த பட்சமாக ரூ.51.48க்கும், சராசரியாக ரூ.77.49க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.7,17,153/-க்கு ஏலம் நடைபெற்றது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.